**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06 ஆம் நாள் புதன் கிழமை

**இடைநிலை மனு எண்.4/2024 ல்**

**அசல் வழக்கு எண்.76/2019**

P.சுரேஷ்குமார்,
த/பெ பெரியசாமி,
எண்.365-2 மனையாரன் காடு,
ஐயப்பன் நகர்,
உன்னியூர்,
தொட்டியம் வட்டம்,
திருச்சி மாவட்டம். ... மனுதாரர் / வாதி

/எதிர் /

1.பெரியசாமி,
த/பெ லேட் நல்லாட்சி கண்டர்,
மெயின்ரோடு,
உன்னியூர்,
தொட்டியம் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

2.நவீன்குமார்
த/பெ பெரியசாமி
மெயின்ரோடு,
உன்னியூர்,
தொட்டியம் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

3. கார்த்திகா
த/பெ பெரியசாமி
மெயின்ரோடு,
உன்னியூர்,
தொட்டியம் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

4. லெட்சுமி(இறந்து விட்டார்)
மெயின்ரோடு,
உன்னியூர்,
தொட்டியம் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

5. செல்வி
க/பெ பெரியசாமி
மெயின்ரோடு,
உன்னியூர்,
தொட்டியம் வட்டம்,
திருச்சி மாவட்டம். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு, கடந்த 28.07.2025 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ஜீவானந்தம் அவர்களும், 4ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார். 1 முதல் 3 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. து.பிச்சைபிள்ளை அவர்களும் முன்னிலையாகியும், மனு, எதிர்மனுதாரர்கள் எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதவுரைகளைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## உத்தரவு

1) மனுதாரர்/வாதி தரப்பில் மேற்படி வழக்கின் வழக்குரையில் 1) தாவாசொத்து விபர பகுதியில் அயிட்டம் 1, 1வது சொத்து விபரத்தில் புஞ்சை நிலம் " பாதைக்கானது" என இணைத்து திருத்தம் செய்யவும்,

2) தாவா சொத்து விபர பகுதியில் அயிட்டம் 1, 2 வது சொத்து விபரத்தில் புஞ்சை நிலம் மற்றும் " கிணறு" என இணைத்து திருத்தம் செய்யக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 6 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:</u>**

2.1) அசல் வழக்கானது பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், அசல் வழக்கில் வாதுரை தாக்கல் செய்தபோது தட்டச்சு பிழை காரணமாக சொத்து விபரத்தின் சில இடங்களில் தவறாகவும், மாறியும், விடுபட்டும். நான்கெல்லை இன்றியும் இருக்கிறது. அசல் வழக்கு தாக்கல் செய்யும் நேரத்தில் அவசர சூழ்நிலை கருதி. மனுதாரரிடம் இருந்த ஆவணத்தைக் கொண்டு மட்டும் தாவா தாக்கல் செய்திருந்த நிலையில், தற்சமயம் விசாரணைக்காக ஆவணங்கள் பெற்று சரி பார்த்தபோது, மேற்படி தாவாவில் கீழ்கண்டப்படி தவறுகள் ஏற்பட்டுள்ளது தற்பொழுது தான் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. இந்த தவறுகள் வேண்டும்மென்றே ஏற்பட்டதல்ல. அந்த தவறை திருத்தம் செய்யவில்லையென்றால், திர்ப்பணையின் போது தங்களுக்குள் தாவாவை முடிவு செய்வதில் தாமதம் ஏற்படும்.

2.2) தாவா சொத்து விபர பகுதியில் அயிட்டம் 11 வது சொத்து விபரத்தில் பாதைக்கானது என இடம் பெற்றிருக்க வேண்டிய நிலையில்

விடுபட்டுள்ளது. மேலும், அயிட்டம் 1, 2 வது சொத்து விபரத்தில் புஞ்சை நிலம் மற்றும் கிணறு என இடம் பெற்றிருக்க வேண்டிய நிலையில், கிணறு என்பது விடுபட்டுள்ளது. அதேபோல் அயிட்டம் 1ல் இறுதியில் 1ம் பிரதிவாதிக்கு உரிமையுடைய பாகம் பிரியாத 5-ல் 1 பாகம் கொண்ட விஸ்தீர்ணத்தில் என இடம்பெற்றிருக்க வேண்டிய நிலையில், அது விடுபட்டுள்ளது. மேலும், அயிட்டம் 1வது சொத்து விபரத்தில் புஞ்சை என்பதற்கு பதிலாக நத்தம் என தட்டச்சாகியுள்ளது.

2.3) மேலும், அயிட்டம் 2ல் 4 வது அயிட்ட சொத்திற்கான விஸ்தீரணம் மற்றும் நான்கெல்லை விடுபட்ட நிலையில் 4.74 சென்ட் விஸ்தீரணம் மற்றும் நான்கெல்லை விபரம், கருப்பண்ண கவுண்டர் நிலத்திற்கு வடக்கு, பஞ்சாயத்து ரோட்டுக்கு தெற்கு என இடம்பெற்றிருக்க வேண்டும் மற்றும் அயிட்டம் 2-ல் 6 வது சொத்தாக விடுபட்ட சொத்தான பட்டா எண். 137 ல் புல எண் 186/11B 0.04.0 ஏர்ஸ் புஞ்சை நிலம், அதன் நான்கெல்லை விபரம் சுரேஷ்குமார் நிலத்திற்கு கிழக்கு மற்றும் வடக்கு, பழனியம்மாள் நிலத்திற்கு தெற்கு, ஆண்டி தங்கராஜ் நிலத்திற்கு மேற்கு மதிப்பு ரூ.20,000/- என சேர்க்கப்பட வேண்டும். மேற்படி சொத்து விபரத்தில் 6 வது சொத்தாக மேற்படி சொத்து சேர்க்கப்படும்பட்சத்தில் "நீதிமன்ற கட்டணத்திற்கும், நீதி வரையறைக்கும் தாவா பொருமானம் ரூ.11.00.000/- என உள்ளது ரூ.11,05,000/- எனவும், தாவா சொத்தின் மொத்த மதிப்பு

ரூ.44.00.000/- என்பது, ரூ.44,20,000/- எனவும், இதில் வாதியின் 1/4 பங்கிற்கு மொத்த மதிப்பு ரூ. 11,05,000/- என திருத்தம் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். எனவே, மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

3. **2,3,5 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:**

3.1) மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் பொய்யென மறுக்கின்றார். அவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரரின் மனு 2வது பாராவில் தட்டச்சு காரணமாக சொத்துக்கள் விவரம் மற்றும் நான்கெல்லை விவரம் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறியிருப்பது பொய். மனுதாரரின் மனு அபிடவிட் 4, 5, 6, 7 வது பாராக்களில் மனு சொத்தில் 1வது அயிட்டம் மற்றும் 2வது அயிட்டத்தில் பாதை மற்றும் கிணறு மற்று புஞ்சை என்று குறிப்பிட வேண்டியது விடுபட்டு போய்விட்டதாகவும், சர்வே எண்கள் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், நான்கெல்லை விவரங்கள் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யாகும்.

3.2) மனுவில் 8 வது பாராவில் மதிப்பு விவரம் 11,05,000/- என்று திருத்தம் செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்தின் அரசாங்க வழிகாட்டி மதிப்பு எதுவும் தாக்கல் செய்யாமல் மனுதாரர் குறிப்பிட்டுள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர் வயோதிகமானவர். இந்த எதிர்மனுதாரரை அலைகழிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் மேற்படி வழக்கு விசாரணைக்கு வந்ததற்கு பின்னிட்டு, கடந்த 2 வருடங்களாக வழக்கை நடத்தாமல் இடைநிலை மனுக்களை தாக்கல் செய்து இழுத்தடித்து வருகின்றார். எனவே, மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பு கருத்துக்களும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

6) மேற்படி அசல் வழக்கானது, மனுதாரர்/வாதியால் பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதுரை தாக்கல் செய்த போது, தட்டச்சு பிழை காரணமாக சொத்து விபரத்தின் சில இடங்களில் தவறாகவும், மாறியும், விடுபட்டும். நான்கெல்லை இன்றியும்

இருக்கிறது என்றும், அசல் வழக்கு தாக்கல் செய்யும் நேரத்தில் அவசர சூழ்நிலை கருதி, மனுதாரரிடம் இருந்த ஆவணத்தைக் கொண்டு மட்டும் தாவா தாக்கல் செய்திருந்த நிலையில், தற்சமயம் விசாரணைக்காக ஆவணங்கள் பெற்று சரி பார்த்தபோது மேற்படி தாவாவில் தவறுகள் ஏற்பட்டுள்ளது அறிந்து, மேற்படி தவறுகள் தற்பொழுது தான் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது என்றும், இந்த தவறுகள் வேண்டும்மென்றே ஏற்பட்டதல்ல என்றும், அந்த தவறை திருத்தம் செய்யவில்லையென்றால், தீர்ப்பணையின் போது தங்களுக்குள் தாவாவை முடிவு செய்வதில் தாமதம் ஏற்படும் என்றும், எனவே, திருத்தம் செய்யக் கோரி மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ளார்.

7) ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மறுத்து எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் அசல் வழக்கு விசாரணைக்கு வந்ததற்கு பிறகு கடந்த 2 வருடங்களாக வழக்கை நடத்தாமல் இடைநிலை மனுக்களை தாக்கல் செய்து வழக்தை நடத்தாமல் இழுத்தடித்து வருகின்றார் என்றும், மனுவை தள்ளுபடி செய்யக் கோரப்பட்டுள்ளது

8) மனுக்களில் கூறப்பட்டுள்ள விவரங்களை திருத்தம் செய்வதனால், வழக்கின் தன்மை மற்றும் வழக்குமூலம் மாறாது. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதைப் பொறுத்து

அசல் வழக்கில் தான் தீர்மானிக்க முடியும். அசல் வழக்கில் சாட்சி விசாரணை இன்னும் தொடங்கவில்லை. பொதுவாக, சாட்சிய விசாரணைக்கு முன் தாக்கல் செய்யப்படும் இதுபோன்ற மனுக்களை தாராள மனப்பான்மையுடன் அணுக வேண்டியுள்ளது. மேலும், தட்டச்சுப் பிழைகளை சரிசெய்ய, உரிய வாய்ப்பு வழங்க வேண்டியது, நீதியின் நலன் கருதி அவசியமாகிறது. மேலும், மனுவை அனுமதிக்காவிட்டால், மனுதாரர்/வாதிக்கு, ஈடுசெய்ய இயலாத இழப்பு ஏற்படும்.

9) முடிவாக,

இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.08.06 17:21:09 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

**இணைப்பு:**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.08.06 17:21:18 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**